©
GOVERNMENT OF TAMIL NADU
2013

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

TAMIL NADU GOVERNMENT GAZETTE

EXTRAORDINARY PUBLISHED BY AUTHORITY

No. 283] CHENNAI, FRIDAY, SEPTEMBER 27, 2013
Purattasi 11, Vijaya, Thiruvalluvar Aandu–2044

Part VI—Section 2

Notifications or Orders of interest to a section of the public issued by Heads of Departments, etc.

NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

COLLECTORS AND LOCAL AUTHORITIES

மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் ஊராட்சிகளின் ஆய்வாளர், நாகப்பட்டினம் மாவட்டம்

நாகப்பட்டினம் மாவட்டம், திருமருகல் ஊராட்சி ஒன்றியம், புத்தகரம் ஊராட்சி மன்றத் தலைவர் பதவி நீக்கம் பற்றிய அறிவிக்கை.

[ந.க. எண் 2573/அ3/உஇ(ஊ)/2012]

No. VI(2)/206(a-1)/2013.

நாகப்பட்டினம் மாவட்டம், திருமருகல் ஊராட்சி ஒன்றியம், புத்தகரம் கிராம ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி. பிரபாரவி என்பவர் ஊராட்சி சட்ட விதிமுறைகளை மீறி ஊராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படுத்தியது தொடர்பாக அன்னார் மீது தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள், அக்குற்றச்சாட்டுகளுக்கு அவரால் அளிக்கப்பட்ட விளக்கங்கள் மற்றும் மேற்குறிப்பிட்டுள்ள ஊராட்சி மன்றத்தின் உறுப்பினர்களின் கருத்துக்கள் ஆகியவற்றை நன்கு பரிசீலனை செய்து, தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 205, உட்பிரிவு (11)—ல் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் ஊராட்சிகளின் ஆய்வாளருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி புத்தகரம் கிராம ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி. பிரபாரவி என்பவரை ஊராட்சி மன்றத் தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்து அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

இந்த அறிவிக்கை 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப் பிரிவு 262 (1) இன்படி ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் தேதியிலிருந்து நடைமுறைக்கு வரும் என தெரிவிக்கப்படுகிறது.

Verified @ RealEstate ™

நாகப்பட்டினம் மாவட்டம், திருமருகல் ஊராட்சி ஒன்றியம், புத்தகரம் ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் பதவி நீக்கம் பற்றிய அறிவிக்கை.

[ந.க.எண் 2573/அ3/உ இ(ஊ)/2012]

No. VI(2)/206(a-2)/2013.

நாகப்பட்டினம் மாவட்டம், திருமருகல் ஊராட்சி ஒன்றியம், புத்தகரம் கிராம ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் திரு. எஸ். உமர்பாரூக் என்பவர் ஊராட்சி சட்ட விதிமுறைகளுக்கு முரணாக செயல்பட்டு, ஊராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படுத்தியதால் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 206, உட்பிரிவு (11)—ல் மாவட்ட ஆட்சித் தலைவர் / ஊராட்சிகளின் ஆய்வாளருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி நாகப்பட்டினம் மாவட்டம், திருமருகல் ஊராட்சி ஒன்றியம், புத்தகரம் ஊராட்சியின், ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் திரு. எஸ். உமர்பாரூக் என்பவரை ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்து அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

இந்த அறிவிக்கை 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப் பிரிவு 262 (1) இன்படி ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் தேதியிலிருந்து நடைமுறைக்கு வரும் என தெரிவிக்கப்படுகிறது.

நாகப்பட்டினம்,
2013 செப்டம்பர் 27.

து. முனுசாமி,
மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும்
ஊராட்சிகளின் ஆய்வாளர்.

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

Verified RealEstate™